தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
முதலாந் தவணைப் பரீட்சை – **2020**
தமிழ்
தரம் - 5

சுட்டெண் :-……..…. நேரம்: 1.00 மணி

I. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது.

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது.

1. அ.ற்றிணைப் பெயர்ச் சொற்கள் இரண்டினை எழுதுக?
   ……..
2. பெயரடைமொழிச் சொல்லை எழுதுக? ……
3. வினையெச்சம் ஒன்றை எழுதுக?
   ……
4. அடுக்கு மொழிச் சொல்லொன்றை எழுதுக?
   ……..
5. தாளம் போடுவது எது?
   ……

(10புள்ளி)

II. இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுக?

(ஞாயிறு, கீரிடம், ஆபரணம், சிறுமை, பிளவு, வீராங்கனை, குணவதி, வேதம், கயிறு, அரசன்)

1. பெருமை - ……
2. மறை - ……
3. வீரன் - ……
4. நாண் - ……
5. சூரியன் - ……
6. குணவான் - ……

www.lkedu.lk

7. கோன் - .....
8. முடி - .....
9. ஐக்கியம் - .....
10. நகை - .....

(20புள்ளி)

III. திணை பால் எண் இடம் காலம் ஆகியவற்றை எழுதுக.

சொற்கள்	திணை	பால்	எண்	இடம்	காலம்
வந்தான்					
பறந்தது					
சென்றார்கள்					
ஆடினாள்					
ஓடின					

(25புள்ளி)

IV. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. முத்தமிழ் என்பது இயல் இசை நாடகம் என்பனவாகும்
2. என்ன நண்பா என்ன பிரச்சனை
3. வீழ்ந்தது எழுவதற்கே முயற்சி செய் வெற்றி நிச்சயம்.

(6புள்ளி)

V. பொருத்தமான சொற்களின் கீழ் கீறிடுக.

1. அவன் எய்த ..... பட்டு மான் கீழே விழுந்தது. (பானம் / பாணம்)
2. காகம் அங்குமிங்கும்.....தேடியது. (இரை / இறை)
3. காடுகளை .....ப்பதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது. (அளி / அழி / அலி)
4. இந்தப் பூமியைச் சுற்றி ..... மண்டலம் உள்ளது.(வலி / வளி / வழி)
5. அவன் ..... உறக்கமின்றி பாடுபட்டு உழைத்தான். (ஊன் / ஊண்)

(20புள்ளி)

VI. எழுவாய் பயனிலை செயப்படுபொருள் என அட்டவணைப்படுத்துக.

1. ஆதிபர் மாணவர்களைப் பாராட்டினார்.
2. சிறுவர்கள் வாத்தியங்கள் இசைத்தனர்.
3. கிளி பழத்தைக் கொத்தியது.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

(9புள்ளி)

VII. நான் ஒரு ஆசிரியரானால் என்ற தலைப்பில் எழுவாய் பயனிலையுடன் கூடிய நான்கு சொற்களுக்குக் குறையாத 5 வாக்கியங்கள் எழுதுக.

1. ……..
2. ……..
3. ……..
4. ……..
5. ……..

(10புள்ளி)

www.lkedu.lk